பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 25 திங்கட்கிழமை 11.11.2024 கதிர் 004

» காணிகள், கைதிகளை விடுவிப்போம்
» சுதந்திரமாக வாழும் சூழலை உருவாக்குவோம்
» விவசாயிகளுக்கு நியாயம் பெற்றுத் தருவோம்
» போதையிலிருந்து நாட்டை மீட்போம்
» பரந்தன், காங்கேசன் தொழிற்சாலைகளை இயக்குவோம்

# எதிர்கால சந்ததி போர் செய்யாத நல்லிணக்கமே முதல் தேவை

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர அறிவிப்பு

இலங்கையில் முதலாவதாக தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவோம். எதிர்கால சந்ததியினர் போர் செய்யாத நாட்டினைஉருவாக்குவோம்.எமதுசந்ததிக்கு அந்தப் பொறுப்புள்ளது என்று ஜனாதிபதி அநுகுரமார திசாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரம் தேவைப்படுகின்றது. தென்பகுதி மக்களும், கிழக்கு மக்களும், வடக்கு மக்களும் நம்புகின்ற அரசியலொன்று எமக்குத் தேவையாகவுள்ளது.இல்லாதுவிட்டால் ☞ 2



## டக்ளஸ் மறுப்பு

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் தனக்கு அமைச்சுப் பதவி கிட்டும் என்று தான் எங்கும் கூறவில்லை என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரவைச் சந்தித்த பின்னர், தனக்கு அமைச்சுப் பதவிகிடைக்கும்என்றுடக்ளஸ்கூறிவருவதுபோக்கிலித்தனமானது என்று தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க ☞ 8

### ஜே.வி.பி. அமைப்பின் தலைவர்

## விஜேவீர கொலையை விசாரிப்பதற்காக ஆணைக்குழுவை நியமிக்க கோரிக்கை

ரோஹண விஜேவீர உள்ளிட்ட கார்த்திகை வீரர்கள் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்குஆணைக்குழுவொன்றைநியமிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் சர்வஜன அதிகாரத்தின் தலைவர் திலித் ஜயவீர முன்மொழிந்துள்ளார்.

கடவத்தையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

## இன்று நள்ளிரவுடன் பரப்புரைகள் முடிவு

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான பரப்புரை நடவடிக்கைகள் இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

பிரசார நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர்நவம்பர்12தேர்தல்பரப்புரை அலுவலகங்கள் அகற்றப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர்ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தற்போது, வேட்பாளர்கள் தேர்தல் பரப்புரைக்காக அலுவலகங்களை அமைத்துள்ளனர். அந்த அலுவலகங்களில் தொகுதி அளவில் இயங்கும் அனைத்து அலுவலகங்களும் நவம்பர் 12 நள்ளிரவு முதல் அகற்றப்படவேண்டும்.

நள்ளிரவு 12.00 மணிக்குப் பிறகு கட்சிகள் ☞ 8

## அறுகம்பேக்கு பாதுகாப்பு செயலர் நேற்றுக் கண்காணிப்புப் பயணம்

பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொண்டா நேற்று அம்பாறை மாவட்டம், அறுகம்பே குடா கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி தெற்கில் முன்னாள் அரசியல்வாதிகளை ஆட்டம் காண வைத்துள்ளதுஎன்னவோஉண்மை. இந்த எழுச்சியை அடுத்து முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்தத் ☞ 2

## நாணய நிதியத்தின் குழு அடுத்த வாரம் வருகிறது

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வார இறுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகநிதியமைச்சுதெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான மூன்றாவது மீளாய்வு குறித்துக் கலந்துரையாடுவதற்காக இந்தக் குழு இலங்கை வரவுள்ளதாகத் ☞ 8

## இந்திய மீனவர்கள் 23 பேர் கைது

யாழ்ப்பாணம் - நெடுந்தீவை அண்மித்த கடற்பகுதியில் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால்நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். 3 மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். ☞ 8

## மேலும் உண்டியல்கள் நவ. 13 அன்று ஏலம்

147,500 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், நவம்பர்13அன்றுஏலவிற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 62,500 மில்லியன் ரூபா பெறுமதியான ☞ 8

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!
ஊழலற்ற தூய கரங்கள்!!

3
சட்டத்தரணி
கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்)
அறிவு - ஆற்றல் - ஆளுமை

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

தேர்தலில் இருந்து ஒதுங்கியது பழைய செய்தி. ஆனால், இப்போது போட்டியிடுபவர்களும்கூட தமது வெற்றி குறித்த நம்பிக்கையின்றிச் சோர்ந்துபோயுள்ளனர். முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன நேற்றுப் பிற்பகல் இந்த நிலமை குறித்துக் களுத்துறையில் இருந்த தேர்தல் மேடையொன்றில் கண்ணீர் விட்-டு அழுதார்.

காஸ்சிலிண்டருக்குப்புள்ளடிபோட்டுவிட்-டு, இலக்கம்பதினொன்றுமீதுபுள்ளடிபோட்டாலும் ரோஹித அபேகுணவர்தன இம்முறை அமைச்சராகமாட்டார் என்பது இங்குள்ள மக்களுக்கு தெரியும். நாங்கள் ஆட்சி அமைக்க மாட்டோம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அது தெரிந்தும் இந்த மேடையில் நான் நிற்கவேண்டியிருக்கும் காலக் கொடுமையைக் கருதினால்.... என்று உணர்ச்சிவசப்பட்ட முன்னாள் அமைச்சர் கண்ணீர்விட்டு அழுதார்.

மீனுக்கு தண்ணீர் வேண்டும், ராணுவ வீரனுக்கு ஆயுதம் வேண்டும். அதேபோல அரசியல்வாதிக்கு மக்கள் தேவை. ஆளும்தரப்பில் இல்லாவிட்டாலும் 32வருடங்கள்என்னைநாடாளுமன்றத்திற்கு அனுப்பிய நீங்கள் இம்முறையும் அனுப்புவீர்கள் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். விரக்தியால் அரசியலை விட்டு விலக மாட்டேன். மலை ஏறினால் வீழ்ச்சி ஏற்படும் என்பது தெரிந்ததுதான் என்று கூறிப் பின்னர் சமாளித்துக்கொண்டார் முன்னாள் அமைச்சர்.

தெற்கில்இந்தநிலைஎன்றால், ஜேவிபியின் எழுச்சி வடக்கில் ஒருவித நக்கலுக்குரியதாக மாறியிருந்தது. ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க கலந்துகொண்ட கூட்டங்கள் நேற்றும் அதற்கு முதல் நாளும் வடக்கில் இடம்பெற்றன. அந்தக் கூட்டங்களுக்கு நல்ல கூட்டமும் வந்திருந்தது. ஆனால், அவர்களில் யாரும் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதும் நீண்ட தூரங்களில் இருந்து பேருந்துகளில் அழைத்துவரப்பட்டவர்கள் முகப்பொலிவோடு மேடைக்கு முன்பாக அமர்ந்திருந்தார்கள் என்பதும் இங்கு எள்ளிநகையாடப்பட்டது. வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் ஜனாதிபதியின் கூட்டங்கள் நடந்தன.

இதற்கு முன்னர் கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் -பிரதமர் ஹரினி கலந்துகொண்ட கூட்டங்களுக்கும்கூட இப்படி பெரும் எண்ணிக்கையானவர்கள் வடக்குக்கு வெளியே தூர இடங்களில் இருந்து பேருந்துகளில் அழைத்து வரப்பட்டிருந்தனர். இது ஜேவிபியின் பண்பியல்புகளில் ஒன்று. அவர்களது ஒவ்வொரு கூட்டங்களிலும் அதிக எண்ணிக்கையானோர் பங்கேற்கிறார்கள் என்று காட்டுவதற்காக வேறு இடங்களில் இருந்து ஆட்களை பேருந்துகளில் ஏற்றிவந்து கூ-ட்டத்தில் இறக்குவது அவர்களின் வழக்கமான பாணி, வடக்கு மக்களுக்கு அது புதிதாக இருந்திருக்கும் என்று சிரித்தார் சிங்களப்பத்திரிகையாளரான நண்பர் ஒருவர்.

அவர் சொன்னதை நிரூபிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் நாவாந்துறை, குருநகர், பாசையூர், யாழ். நகரப் பகுதி ஆட்களைச் சல்லடை போட்டுத்தான் தேடவேண்டியிருந்தது என்பது போக, கூட்டம் முடிந்ததும் வந்திருந்தவர்களை ஏற்றிச் செல்ல வேறு மாகாண இலக்கத்தகடுகளுடன் கூடிய பேருந்துகள் நீண்ட வரிசையாக வந்து நின்றன.

.................................

இன்றோடு தேர்தல் பரப்புரைகள் நிறைவுக்கு வந்துவிடும். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து மதுபான நிலையங்களுக்கான அனுமதியைப் பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களை ஆளும் தரப்பு இன்னமும் வெளியிடவில்லை. ஆட்சிக்கு வந்த சில நாள்களில் அதனை வெளியிடுவோம் என்றவர்கள் செய்யவில்லை. அதில் இந்தியாவுக்கு வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களின்பெயர்கள்பலஇருப்பதாகவும், பட்டியலை வெளியிட்டால் அது அவர்களுக்கு தேர்தலில்பாதகமாகஅமையும்என்றுஇந்தியா கருதுவதால் பட்டியலை வெளியிடவில்லை என்றும் இப்போது கதையளக்கின்றன ஜேவிபியின் கீழ் மட்டத் தலைமைகள்.

அதுமட்டுமல்ல எதிர்க் கட்சியில் இருந்தபோது மதுபான உற்பத்திச்சாலைகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி நிலுவையை பெறப்படாமல் இருப்பது தொடர்பில் கடுமையான விமர்சனங்களை அநுரவும் அவரது தேசிய மக்கள் சக்தியும் முன்வைத்து வந்தன. மேடைக்கு மேடை அது பற்றிக் கிழித்துத் தொங்கவிட்டார்கள். ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வந்த இந்த் ஒரு மாத காலத்திலும் அந்த வரி மீதியைப் பிடுங்கி எடுக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது.

இதுவரையில் மதுபான நிறுவனங்களால் அரசுக்குச் செலுத்தவேண்டியுள்ள வரி மீதித் தொகை 850 கோடி ரூபாய். இதில் கடந்த ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை செலுத்த வேண்டிய வரி மீதி மட்டும் இதுவரை 180 கோடி ரூபாய்.

இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பணத்தை செலுத்தாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கலால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இப்படிச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்களேதவிரஎந்தவிதநடவடிக்கையும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## எதிர்கால....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டில் சமாதானத்தினை உருவாக்க முடியாது.

முதலாவதாக நாம் எமது நாட்டில் தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவோம். எதிர்கால சந்ததியினர் போர் செய்யாத நாட்டினை உருவாக்குவோம். எமது சந்ததிக்கு அந்தப் பொறுப்புள்ளது. வடக்கு மக்களுக்கு எம் மீது ஓரளவு நம்பிக்கை உள்ளது என்பதை அறிவேன்.

எமது ஆட்சியின் கீழ் காணப்படும் அவநம்பிக்கைகளை ஒவ்வொன்றாக இல்லாதொழிப்போம். அனைத்துப் பிரஜைகளும் சுதந்திரத்தினை எதிர்பார்க்கின்றனர். சுதந்திரமான மனோநிலை இருக்கவேண்டும்.

தமது மொழில் கதைக்கும்போது, தமது கலாசாரத்தினை பின்பற்றும்போது, தமது மாகாணத்தில்வாழும்போதுதமக்குசுதந்திரம் உள்ளதாக அவர்கள் உணரவேண்டும்.

முதலில் சுதந்திரமாக வாழக்கூடிய சுற்றுச்சூழலை வடக்கு மாகாணத்தில் ஏற்படுத்திக் கொடுப்போம். உங்களது காணிகளை படிப்படியாக விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்போம். எமது ஆளும்தரப்பு வறுமையின் பிடியின் இருந்து மக்களை மீட்பதற்கு செயற்படவுள்ளது. நாம் அதனை செய்யாது விட்டால் யார் அதனைச் செய்வார்கள் என்ற கேள்வி உள்ளது.

நாம் விவசாயிகளுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்போம்.வடக்கில்இயற்கையின் இடர்களுடன்போராடிசெய்கைகளில்ஈடுபடும் விவசாயிகள் உள்ளனர். அவர்களுக்கான நியாயத்தினையும் பெற்றுக்கொடுப்போம்.

தற்போது உர மனியத்தை 15இலிருந்து 25 ஆயிரத்துக்கு உயர்த்தியுள்ளோம். அதேபோன்று விதை மானியத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

புதிய விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்போம். மீன்பிடித்தொழில் முக்கியமானது. எமது கடலில் எமது மீனவர்கள் மீன்படிப்பதற்கான உரிமையை நாம் உறுதிப்படுத்துவோம். எவரும் அதனை அழிப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை.

மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வகையில் சீன அரசு பாடசாலைமாணவர்களுக்கானசீருடையை இலவசமாக வழங்கவுள்ளது.

வறுமையில் உள்ள மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வியை வழங்கும் நோக்கில் ஜனவரி 27 ஆரம்பிக்கப்படும் முதலாம் தவணைக்கு முன்பதாக அப்பியாசக்கொப்பிகள்உள்ளிட்டபாடசாலை உபகரணங்களை வாங்குவதற்கான கொடுப்பனவொன்றை ஆளும்தரப்பு வழங்கவுள்ளது.

போரின் பின்னரான காலத்தில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு பகுதி போதைப்பொருளில் சிக்கியுள்ளது. இளையோர் மத்தியில் கேரள கஞ்சாவும் போதைப்பொருளும் வியாபித்துள்ளது. இதனை நான் நன்கு அறிவேன். வடக்கையும்,நாட்டையும்போதைப்பொருளில் இருந்து மீட்போம்.

எமது நாட்டில் அரசியல்வாதிகளே போதைப்பொருள் வியாபாரத்தின் பின்னணியில் இருக்கின்றார்கள். ஆகவே அவர்கள்போதைப்பொருள்வியாபாரிகளை பாதுகாக்கின்றார்கள். இந்த நிலைமையை தடுத்து நாம் எமது எதிர்கால சந்ததியை பாதுகாப்போம்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை உள்ளது. அது மூடப்பட்டுள்ளது. அதனை மீள இயக்க வேண்டும். எமக்கு சல்பூரிக் அமிலம் தேவையாக உள்ளது. அதனை உற்பத்தி செய்யும் நிலையமாக பரந்தன் தொழிற்சாலையை மாற்றுவோம். அதேபோன்று சீமெந்து தொழிற்சாலையையும் மீள இயக்குவோம்.

நாம் தேர்தல் மேடைகளில் மக்களை ஏமாற்றி திசை திருப்புகின்றோம் எனக் குற்றஞ்சாட்டுகின்றார்கள். யாழ்ப்பாணத்தில்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 2000 சம்பளத்தை பெற்றுத் தருக

## ஜனாதிபதியிடம் ரணில் வலியுறுத்து

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைநாள்சம்பளத்தை35சதவீதத்தால் அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியினர் வலியுறுத்தினர். எனவே, தற்போது 2 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எப் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார் . அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், மலையக மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ்தான் மலையக மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டன.

சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் காலங்களில் மலையகத்துக்கு பல சேவைகள் செய்யப்பட்டுள்ளன. ஜீவன் தொண்டமான் அமைச்சராக மலையகத்துக்கு மட்டுமல்ல முழு இலங்கைக்கும் வேலை செய்துள்ளார்.

பாராளுமன்றத்தை சுத்தப்படுத்துவதற்கு வாக்களிக்குமாறு ஜனாதிபதி கோருகின்றார். அவர்களின் வேட்பாளர்கள் யாரென்றுகூட தெரியவில்லை. அபூர்வ மனிதன் போல் தான் உள்ளனர். ஜி.பி.ஆர்.எஸ்.மூலம்தான் மாவட்ட எல்லைகளைத் தேடுகின்றனர்.

பாராளுமன்றத்தை கள்வர்களின் குகை என்கிறார்கள், ஆனால் கள்வர்களை பிடிப்பதற்குரிய சட்டங்கள் எனது ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது.

வாழ்க்கைச்சுமை தற்போது அதிகரித்துள்ளது.பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றார்கள், தயவுசெய்து அந்த சம்பள உயர்வை வழங்குமாறு கோருகின்றோம். நாம் அடிப்படை சம்பளத்தை 35 சதவீதத்தால் அதிகரித்து கொடுத்தோம்.

பெருந்தோட்டங்களை கிராமங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். பெருந்தோட்ட நிர்வாகங்களின் கீழ் இருந்து தோட்டங்களை விடுவித்து, தேவையானஏற்பாடுகளைமுன்னெடுப்பதற்கு தயாராகிவந்தோம். அனுபவம்மிக்கவர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும். காங்கிரஸ் வேட்பாளர்கள் உட்பட எமது பக்கம்உள்ளவர்கள்அனுபவம்மிக்கவர்கள்.

எனவே, நுவரெலியா மாவட்டத்தில் யானைசின்னத்தைவெற்றிபெறவைக்கவும். நுவரெலியாவில் இருந்து யானை சின்னத்திலும், ஏனைய பகுதிகளில் இருந்து சிலிண்டர் சின்னத்திலும் வேட்பாளர்கள் சபைக்கு வரவேண்டும் – என்றார்.

# சுன்னாகம் விபத்துத் தொடர்பில் தனி பொலிஸ் குழு விசாரணை

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற விபத்து, பொலிஸார் நடந்துகொண்ட விதம் தொடர்பில் விசேட பொலிஸ்குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம். ஜருள் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் வேன் – மோட்டார் சைக்கிள் விபத்தினை தொடர்ந்து வாகன சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை சிவில் உடையில் நின்ற பொலிஸார் பரிசோதிக்க முற்பட்டவேளை சாரதிக்கும் பொலிஸாருக்கும் இடையில் முதலில் வாய்த்தர்க்கமும், பின்னர் கைகலப்பும் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தடுக்கச் சென்ற சாரதியின் மனைவியையும் பொலிஸார் தாக்கினர் எனவும், அவரின் கையில் இருந்த அவர்களின் இரண்டுமாத குழந்தையை பொலிஸார் தூக்கி எறிந்தனர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தினையடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் முன்பாக மக்கள் கூடியமையால் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம். ஜருள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் பயணித்த மோட்டார் சைக்கிளும் வேன் ஒன்றும் காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் சந்திக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தினையடுத்து, வாகனம் அவ்விடத்தில் இருந்து தப்பிச்செல்ல முற்பட்டவேளை, சிவில் உடையில் நின்ற பொலிஸார் வாகனத்தை வழிமறித்து, சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை கேட்டுள்ளனர்.

சிவில் உடையில் உள்ளவர்களுக்குதான் சாரதி அனுமதிப் பத்திரத்தினை தர மாட்டேன் எனக் கூறி சாரதி தர்க்கம் செய்த நிலையில் இருதரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும் கைகலப்பில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் உத்தரவில், விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளில் குற்றவியல் குற்றங்கள் கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

பொலிஸார் பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே கடமையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு என ஒரு வரையறை இருக்கிறது. அதை அவர்கள் மீற முடியாது. மீறினால் நிச்சயமாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

சுன்னாகத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட குழுவினரால் பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

சம்பவம்தொடர்பில்முழுவிசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ் மாஅதிபரும் அறிவுறுத்தியுள்ளார். நிச்சயமாக பக்கச் சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசு விடுவித்த நிதியை தானே கொண்டு வந்தவர் என கோரும் அங்கஜன் திரும்பியநிதிக்குப் பொறுப்பேற்பாரா?

## தமிழ் அரசு வேட்பாளர் பிரகாஷ் சாட்டை



யாழ்ப்பாணத்திற்கு அரசு விடுவித்த பணம் முழுவதையும் தான் கொண்டு வந்தார் எனக் கூறும் ஒரு முன்னாள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன், நிர்வாகம் விட்ட பிழையால் திரும்பிச் சென்ற பணத்தை கூற மறுக்கின்றார் எனத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் தி.பிரகாஷ் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டபோதும் பணிகள் நிறைவு செய்யாமல் இடை நடுவில் பணம் திரும்பிச் சென்றது. ஆனாலும் அப் பணத்தை எடுத்து பணியை நிறைவு செய்யவும் இல்லை. அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமையால் பணத்தைப் பெற்றிருக்கலாம். இன்று என்ன செய்தோம் என பத்திரிகைகளில் பக்கம், பக்கமாக விளம்பரம் போடும்போது இவற்றையும் கூற வேண்டும். குறிப்பாக இளவாளை சென் ஹென்றிஸ் பாடசாலையில் விளையாட்டரங்கு ஒரு கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி எழுதப்பட்டது. ஆனால் 2020 இல் வெறும் 34 லட்சத்து 15 ஆயிரத்து 835 ரூபாவிற்கான பணிகள் மட்டுமே இடம்பெற்ற நிலையில் மிகுதிப் பணம் திரும்பியது.

அராலி சரஸ்வதி வித்தியலயத்திற்கு ஒரு கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 795 ரூபா திட்டம் அனுமதிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஸ்ரார் கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு பணி வழங்கப்பட்ட பின்பு நிறுத்தப்பட்டது.

சங்காணை சின்னம்மா வித்தியா லயத்தில் ஒரு வகுப்பறைகளிற்காக 90 லட்சத்து 18 ஆயிரத்து 112 ரூபாவிற்கு பணி வழங்கியபோதும் வெறும் 20 லட்சம் ரூபாவுடன் திட்டம் நிறுத்தப்பட்டது.

இவ்வாறே யாழ்கோ நிறுவனத்தின் இயந்திரப்பொறி முழுமையாக மாற்றத்திற்கு 3 கோடியே 98 லட்சத்து 4 ஆயிரம் ரூபா அனுமதிக்கப்பட்டு நிறுவனம் ஒன்றிற்கு ஒப்பந்தம் வழங்கி, காலதாமதம் என்னும் பெயரில் அசமந்தப் போக்கால் திட்டம் முழுமையாக இழக்கப்பட்டது.

இதே யாழ்கோவின் கட்டடப் பணிக்காக ஒரு கோடியே 68 லட்சத்து 36 ஆயிரந்து 750 ரூபாவிற்கான திட்டத்திற்கு 2019-05-21 இல் ஒப்பந்தம் வழங்கியபோதும் வெறுமனே 49 லட்சத்து 11 ஆயிரத்து 486 ரூபாவிற்கான பணி நிறைவு செய்யப்பட்டபோதும் எஞ்சிய நிதியைப் பெற ஏற்பாடுகள் செய்யாதமையால் திட்டம் கிடப்பில் உள்ளது.ஒப்பந்தம் வழங்கிய மொத்தப் பெறுமதி 8 கோடியே 70 லட்சத்து 43 ஆயிரத்து 647 ரூபா. ஆனால் பணி இடம்பெற்றது ஒரு கோடியே 3 லட்சத்து 27 ஆயிரத்து 321 ரூபாவிற்கு மட்டுமேயாகும். இதனால் 7 கோடியே 67 லட்சத்து 16 ஆயிரத்து 326 ரூபா பணம் திரும்பிச் சென்றது. இதற்கு யார் பொறுப்புக் கூறுவது?

இந்தத்திட்டம் ஆரம்பிக்கும்போது அதற்குபாடுபட்டு இந்ததிட்டங்களை அப்போதைய மாவட்ட அரசஅதிபரும் தற்போதைய ஆளுநருமான நா.வேதநாயகனே கொண்டுவந்தார். வேதநாயகனைப் பிடிக்கவில்லை, வேண்டாப் பெண்டாட்டி கால் பட்டாலும் குற்றம் கைபட்டாலும் குற்றம் என்பதற்காக கொடுத்த விலை இந்த மாவட்ட மக்களிற்கு வந்த 7 கோடியே 67 லட்சத்து 16 ஆயிரத்து 326 ரூபா பணம் திரும்பிச் செல்லும்படியாக நடந்துகொண்டமையே ஆகும்.

2019இல் ஆரம்பித்த இந்த திட்டங்களை 2020 பெப்ரவரியில் வேதநாயகன் விரட்டப்பட்டதும் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டன. மாறாக மே மாதம் முயன்றிருந்தால் அந்த நிதியைப் பெற்றிருக்க முடியும்.

இவற்றை செய்யத் தெரியாமல் என் கனவு யாழ் என்று பிதற்றி கனவு பாழாக விட்டவர்கள் யார் என்பதனையும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். - என்றார். (05)

# தேர்தல் தினத்தன்று இலங்கை வருகிறது நாணய நிதியக் குழு

17ஆவது நாடாளுமன்றத்திற்கான வாக்கெடுப்பு வியாழக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், அன்றைய தினம் சர்வதேச நாணய நிதியத்தின் உயரிய குழு இலங்கைக்கு விஜயம் செய்கிறது.

இந்த விஜயத்தின் அடுத்தகட்ட கடன் வசதி குறித்து அரச தரப்பினருடனான சந்திப்பின் போது கலந்துரையாடப்பட உள்ளது.

குறிப்பாக நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் சமகால மற்றும் எதிர்கால இலக்குகள் தொடர்பில் அரசாங்கத்தின் ஈடுப்பாடுகளையும் கொழும்பு விஜயத்தின் போது நாணய நிதிய குழு அவதானத்திற்கு உட்படுத்த உள்ளது. அது மாத்திரமின்றி அரசாங்கத்தின் எதிர்கால பொருளாதார திட்ட வரைவை நாணய நிதியம் கோரியுள்ளது.

வாஷிங்கடனில் இடம்பெற்ற பேச்சுகளின் போது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின் சார்பில் கலந்துக்கொண்டிருந்த மத்திய வங்கிய ஆளுநர் கலாநிதி நந்தலல் வீரசிங்க மற்றும் திறைச்சேறி செயலாளர் மஹிந்த சிறிவர்தன உறுதியளித்திருந்தனர்.

இதன் பிரகாரம் மூன்றாவது நீட்டிக்கப்பட்ட கடன் வசதிக்கான மீளாய்வுகளை நிறைவுபடுத்த அரசாங்கத்துடன் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டியதுள்ளது. இதற்கு அமையவே நாணய நிதியத்தின் உயரிய குழு இலங்கை வருகின்றது.

இலங்கையின் ஒப்புதல்களின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற வாஷிங்டன் பேச்சுகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இருப்பினும் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் குறித்தும் அரசவருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் வாஷிங்டன் பேச்சுகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இலங்கை விஜயத்தை சர்வதேச நாணய நிதியத்தின் ஆசியபசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதிய திட்டத்திற்கான அர்ப்பணிப்பை இலங்கையின் புதிய அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது. ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ள பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் மூலம் இலங்கைக்கு சிறந்த பலன்கள் கிடைத்துள்ளன.

விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார சீர்திருத்தத் திட்டங்கள், பொருளாதார மற்றும் நிதிக் கொள்கை அமுலாக்கத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன் மேலும் குறிப்பிட்டார்.

(05)

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் தாயும் மகளும் கைதாகினர்

## கட்டுநாயக்கவில் சம்பவம்



சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சுமார் ஒரு கோடியே 17 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் தாயும் மகளும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் சனிக்கிழமை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை பிரதேசத்தில் வசிக்கும் 61 வயதுடைய தாய் மற்றும் 38 வயதுடைய மகளுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் டுபாயிலிருந்து சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களின் பயணப் பொதிகளிலிருந்து வெளிநாட்டில்தயாரிக்கப்பட்ட 'பிளாட்டினம்' வகையுடைய 78,200 சிகரெட்டுகள் அடங்கிய 391 சிகரெட் கார்டூன்கள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

மேலும், கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளுடன் சந்தேக நபர்கள் இம்மாதம் 13ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நல்லிணக்கத்திற்கே அடிப்படை தமிழருக்கான அரசியல் தீர்வுதான்

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணம் வந்த அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே முதல் தேவை என்கிற சாரப்பட உரையாற்றியிருக்கின்றார். அரசுத் தலைவர் தேர்தலின்போது வடக்குக்கு வந்திருந்த அவர், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்றும் ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான வரைவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் அவர் இது பற்றியெல்லாம் வாயே திறக்கவில்லை.

”நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரம் தேவைப்படுகின்றது. தென்பகுதி மக்களும், கிழக்கு மக்களும், வடக்கு மக்களும் நம்புகின்ற அரசியலொன்று எமக்குத் தேவையாகவுள்ளது. இல்லாதுவிட்டால் இந்த நாட்டில் சமாதானத்தினை உருவாக்க முடியாது.

முதலாவதாக நாம் எமது நாட்டில் தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவோம். எதிர்கால சந்ததியினர் போர் செய்யாத நாட்டினை உருவாக்குவோம். எமது சந்ததிக்கு அந்தப் பொறுப்புள்ளது. வடக்கு மக்களுக்கு எம் மீது ஓரளவு நம்பிக்கை உள்ளது என்பதை அறிவேன்.

எமது ஆட்சியின் கீழ் காணப்படும் அவநம்பிக்கைகளை ஒவ்வொன்றாக இல்லாதொழிப்போம். அனைத்துப் பிரஜைகளும் சுதந்திரத்தினை எதிர்பார்க்கின்றனர். சுதந்திரமான மனோநிலை இருக்கவேண்டும். தமது மொழில் கதைக்கும்போது, தமது கலாசாரத்தினை பின்பற்றும்போது, தமது மாகாணத்தில் வாழும்போது தமக்கு சுதந்திரம் உள்ளதாக அவர்கள் உணரவேண்டும்.

முதலில் சுதந்திரமாக வாழக்கூடிய சுற்றுச்சூழலை வடக்கு மாகாணத்தில் ஏற்படுத்திக் கொடுப்போம். உங்களது காணிகளை படிப்படியாக விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்போம்” என்றார் அரசுத் தலைவர்.

வடக்கு மக்களும் நம்புகின்ற அரசியலொன்று இல்லாமல் இந்த நாட்டில் சமாதானத்தினை உருவாக்க முடியாது என்று அரசுத் தலைவர் கூறுவது முற்றிலும் உண்மை. அதற்காக முதலாவதாக நாம் எமது நாட்டில் தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவோம் என்று கூறுவதுதான் ஏற்புடையதல்ல. தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்தாமல் இலங்கையில் சமாதானத்தினை ஏற்படுத்துவது என்பது அரிதானது. அது இலகுவில் சாத்தியமானது இல்லை. அரசியல் தீர்வு இன்றி வடக்கு கிழக்கு மக்களிடமிருந்து அமைதிக்கான ஒத்துழைப்பை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதானால் அரசியல் தீர்வும் கடந்தகாலங்களில் ஆளும் தரப்புக்கள் இழைத்திருக்கக்கூடிய இனவாதக் கண்ணோட்டத்திலான தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்கும் நீதி அவசியம். எதிர்கால சந்ததியினர் போர் செய்யாத நாட்டினை உருவாக்குவோம் என்று அரசுத் தலைவர் கூறுவது நடக்கவேண்டுமானாலும் அரசியல் தீர்வு ஒன்றே முக்கியம். அரசுத் தலைவரும் ஆளும் தரப்பினரும் நினைப்பது போன்று பொருளாதார நலன்களும் காணி விடுவிப்பும் கைதிகள் விடுவிப்பும் மட்டும் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் வேணவாவைப் பூர்த்தி செய்துவிடமாட்டா. அவை தமிழர்களின் விடுதலைக்கான போராட்ட வடிவங்களை மாற்றமடைய வைக்கலாமே தவிர அவர்களின் கோரிக்கைகளையும் கிளர்ச்சியையும் முற்றாக அழித்துவிடமாட்டா. எனவே நல்லிணக்கத்தை உருவாக்க அரசுத் தலைவர் முதலில் அரசியல் தீர்வைக் கொண்டுவரவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

# ஒவ்வொரு வாக்கையும் பெறுமதியுடையதாக்குவோம்!

ந.சதாசிவ ஐயர்



இன்னும் ஒரு சில நாட்களில் சொந்தபந்தம் பார்க்காமல் அவர் இவரென்று பார்க்காமல் குறுகிய வட்டத்திற்குள் நிற்காமல் தனிநபர் நற்சேவைகளை கருத்திற் கொள்ளாமல் இவர் செய்யவில்லை அவர் செய்யவில்லை இவர் செய்தார் அவர் செய்தார் என்று பாராமல் மாற்றம் வரப்போகிறது பொன்மழை பொழியப்போகிறது என பகற் கனவு காணாமல் எமது பொன்னான வாக்குகளை பொருளற்றதாக்காமல் கூட்டாக வழங்கி தகுதியானவர்களை ஓரணியில் கூட்டாக முன் நிறுத்தி எமது ஜனநாயக கடமையை சீராக நிறைவேற்றுவது எமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஏனைய இனங்கள் விடிவு பெற பலநூறு ஆண்டுகள் சென்றதாகவும் போராட்ட வடிவங்கள் மாறியதாகவும் அதுபோல் எமது போராட்டத்திலும் அதற்காக எரிந்த நெருப்பு இப்போதும் தணலாக காய்கிறது என்றும் அது அணைந்துவிடாமல் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிப்பது எனது கடமை என்று முழங்கும் திருவாளர் சிறிதரன் அவர்களும் இதுதான் எல்லை இதைவிட்டு நகரோம் என பொன்னம்பலம் சந்ததி முழங்குவதும். நாங்களும் விடுதலைக்காக இங்காலும் அங்காலும் சேர்ந்து போரடினனாங்கள் விட்டோமா பார் என அதே பழைய பெயர்களில் சேர்ந்து பூச்சாண்டி காட்டுபவர்களும். ஒரே பல்லவியை திரும்ப திரும்ப ஒரே வாத்தியத்தில் வாசிப்பவரும் தேவைக்கேற்ப நிறம்மாறும் கரட்டி ஓணான்களும் ஏன் சேர்ந்து கோரஸ் பாடுகிறார்கள்?

எத்தனையோ நல்ல உள்ளங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து சமய சமூக பணிகளை சாந்தமாக அமைதியாக முன்னெடுத்துவரும் நிலையில் சுயஉற்பத்திகளை பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் கூட்டாகவும் தனியாகவும் செய்துவரும் நிலையில் துறவிகளாய் வாழ்ந்து மக்கள் சேவைக்கே தம் வாழ்வை ஒப்படைத்து பலநூறு அன்பர்களின் உதவியுடன் பலகோடி ருபா பெறுமதியான சேவைகளை இலகுவாக செய்துவரும் நிலையில் அதனை தமது கடனாக அமைதியாக செய்து வரும் நிலையில் அது செய்தேன் இது செய்தேன் அது செய்வேன் இது செய்வேன் எனக்கு தலைப்பா கட்டுங்கள் என முகம் தெரியதாவராக இருந்து இப்போ மாரி தவளைகள் போல் விட்டில் பூச்சிகள்போல் துள்ளிக் குதிப்பவர்களும். அடைந்தால் மகாதேவி அல்லது மரணதேவி என நம்பியார்போல் திடீர் திடீரென களத்திலிறங்கிய கதிரை ஆசைகளும். தனக்கென தனியறை தரவில்லை என்பதால் இரவோடிரவாக பெட்டி கட்டி வாடகை அறைக்கு மாறியவர்களும். புலம்பெயர்ந்து அங்கு வசதியாக இருந்துகொண்டு எங்களை ஆட்டிப்படைப்போம் என அள்ளி வீசுவதும் சமூக ஊடகம் எனும் பெயர்களில் சாக்கடையாய் ஓடுவதும் முகநூலில் ஒழிந்திருந்து கீறிக்கிழிப்பதுவும் அப்பப்பா போதும் போதும் வடக்கு கிழக்கு படும்பாடு போதுமடா சாமி போதும். பாரதி இருந்திருந்தல் எங்கள் தமிழர் நாகரீகம் கண்டு வசை பாடியே எரித்திருப்பான்.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் மட்டுமா வாழ்கின்றனர். வடக்கு கிழக்கை பூர்வீகமாக கொண்ட தமிழ் மக்களே இன்று புத்தளம் முதல் பாணந்துறைவரை குடியும் குடித்தனமுமாய் கலந்து வாழ்கின்றனர். கொழும்பிலும் சுற்றப்புறத்திலும் தொழில் நிமித்தமாக குடும்பமாக வாழ்கின்றனர். (அவர்களுடைய வாக்குப்பதிவுகளும் அனேகமாக அவ்விடங்களிலேயே உள்ளன என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்) பல்கலைக்கழகங்களில் எங்கும் எல்லா மாணவர்களும் கலந்து நட்புடன் கற்கின்றனர். மலையக தமிழரும் அவ்வாறே மலையகத்தில் செறிந்தும் மற்றைய இடங்களில் கலந்தும் வாழ்கின்றனர். கொழும்புத் தமிழர் என்று சொல்கின்ற ஒரு சிறு தொகுதியினரும் உள்ளனர். முஸ்லிம்களும் தமிழ் மொழி பேசுபவர்களே. இப்படியெல்லாம் கூட்டிக்கழித்து பார்த்தால் இலங்கையில் தமிழை தாய்மொழியாக கொண்ட தமிழ்பேசும் மக்கள் என ஒரு தொகுதி உண்டு என்பதை மறுக்க முடியாது.

எமது பூர்வீகநிலமும் உரிமையும் சுதந்திரமும் பாதுகாக்கப்படவேண்டும் சமய மொழி கலை கலாச்சாரத்தை நாம் விட்டுவிடாமல் பாதுகாக்கவும் வேண்டும் பரந்து வாழும் நம்மவரையும் விட்டுவிடாமல் அவர் நலத்தில் நாமும் நம் நலத்தில் அவர்களும் அக்கறையுடையவர்களாக இருத்தலும் வேண்டும்.

இத்தனையும் வேண்டுமானால் பெரும்பான்மை ஆசனங்களுடன் அமையப்போகிறது என எதிர்பார்க்கப்படும் நல்ல அரசுடனும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் தேவைக்கேற்ப ஒருமித்தும் சேர்ந்தும் போகக்கூடிய சிறிதரன் ஐயா சொல்வதுபோல் தணலையும் அணைந்துவிடாமலும் காலம் கனியும்வரை எரிந்து நீர்த்துப்போகாமலும் அவ்வப்போது ஊதி பாதுகாக்கும் பெரும்பான்மை பலத்துடனான ஒரு மிதவாதக் கட்சியே வடக்குக் கிழக்கில் இப்போதய தேவை. அன்றி யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் மட்டும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவர்களும் தனிநபர்களும் எமக்கு வேண்டவே வேண்டாம். ஆதலால் வடக்குக் கிழக்கில் செல்வநாயகம் ஐயா காலம் முதல் வேருன்றிய கட்சியை எல்லோரும் சேர்ந்து அனுப்புவதே எமது தேவையாகும். ஆதனை உணர்ந்து செயற்படுவோம்.



காலைக்கதிர் Kalaikkathir

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டம்

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# யார் இந்த சயந்தன்?



**-கம்பவாரிதி ஜெயராஜ்**

கேசவன் சயந்தன் எனது நீண்டநாள் நண்பர். அவரை இம்முறை தமிழரசுக் கட்சி வேட்பாளராகக் களமிறக்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அவர் சென்றமுறையே வேட்பாளராக நிறுத்தப்படவேண்டியவர் என்பது பலருடைய கருத்தாக இருந்திருக்கின்றது. அத்துடன் அவர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்கிற எதிர்பார்ப்பும் இருந்திருக்கின்றது. ஆனால் சிலபேருடைய தலையீடுகளால் அந்த வாய்ப்பை இழந்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டு நான் கவலைப்பட்டுமிருக்கின்றேன்.


சமூகத்தோடு இணைந்து வாழு கின்ற இளையவர்கள் இன்றைக்கு குறைந்து விட்டார்கள். அதுவொரு பெரிய குறைபாடு. சமூகத்தினுடைய நன்மை தீமைகளில் அதில் தாங்களும் கலந்துகொண்டு, அதில் ஈடுபட்டு, செயற்படுகின்ற இளையோர் தொகை இன்றைக்கு மிகக் குறைவாகிவிட்டது. இன்றைக்கு அரசியல் கட்சிகளில் இருக்கின்ற தலைவர்கள், தொண்டர்கள் என அனைவரிடத்திலும் சமூகச் செயற்பாடென்பது பூச்சியமாகத்தான் இருந்துவருகின்றது. நாங்கள் ஆண்டுதோறும் முத்தமிழுக்கும் விழாக்கள் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் எடுத்துவருகின்றோம். யாழ்ப்பாணத்திலோ, கொழும்பிலோ தமிழுக்காகத் தமிழர்கள் அனைவரும் பெரும்பான்மையாகக் கூடுகின்ற பெருவிழாக்கள் இதுவாகும். அப்படியான தமிழுக்கான பெருவிழாவில் கூட நம்முடைய கட்சித்தலைவர்கள் பல பேரைக் காணமுடிவதில்லை. இதுவொரு பெரிய குறைபாடு என்றே நினைக்கிறேன். அமிர்தலிங்கம் போன்ற கூட்டணித்தலைவர்கள் வாழ்ந்த காலத்தில் நான் பார்த்து ரசித்த ஒரு விசயம், அவர்கள் வாழுகின்ற ஊர்களிலே திருமண வீடோ அல்லது மரணச் சடங்கோ இடம்பெற்றால் அத்தலைவர்கள் கட்டயாமாக அங்கே பிரசன்னமாகியிருப்பார்கள். மரணச்சடங்குகளில் கலந்துகொள்ளும் தலைவர்கள், அந்தச் சடலம் மயானத்திற்குப் போகும்வரைக்கும் அவர்களும் இறுதி ஊர்வலத்தோடு நடந்து போவதை நான் பார்த்திருக்கின்றேன். இன்றைக்கு அந்த நிலமை இல்லை. எல்லோரும் உப்பரிகையில் இருந்துகொண்டு தலைவர்களாகப் பார்க்கிறார்கள். கேசவன் சயந்தன் அதிலிருந்து விதிவிலக்கானவர் என்பது என்னுடைய கருத்து.

எல்லோருடைய இன்ப துன்ப நிகழ்வுகளிலும் சயந்தனுடைய பங்களிப்பு இருக்கும். அல்லது அந்த நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டிருக்கிறார் என்கிற செய்தியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ஊரோடு தொடர்பிருக்கின்றபடியால் நானறிந்த செய்தி இது. கம்பன்கழகம் என்கிற வகையில், கம்பன் கழகம் நடத்துகின்ற எல்லா விழாக்களிலும் சயந்தனுடைய பங்களிப்பு இருந்திருக்கின்றது. நான் அந்தப் பங்களிப்புக்காக இதைப் பேசுகின்றேன் என்று நினைக்காதீர்கள். சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையால், நன்றியுடைமையோடு அதனைச் சொல்லத் தலைப்படுகின்றேன். நாங்கள் விழாக்கள் நடத்தப் பொருளாதார ரீதியில் கஸ்ரப்படும்போதெல்லாம் அவர் கைகொடுத்திருக்கிறார். அது மட்டுமல்ல, எங்களுடைய எல்லா விழாக்களிலும் அவருடைய பிரசன்னத்தை நான் பார்த்திருக்கிறேன். தனக்கொரு முக்கியத்துவத்தைத் தேடாது, விழா அரங்கின் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்து, விழாவின் பேசுபோருளைக் கேட்டுப்போகும் தன்மையினைப் பார்த்திருக்கிறேன்.

இன்றைக்கு, பெரும்பான்மையான கட்சிகளிலும் இப்படியான இளையோர்கள் இல்லாமல்தான் இருக்கிறார்கள். தேர்தல் என்றால்தான் அவர்களை முகம்காணக் கூடியதாக இருக்கின்றது. கேசவன் சயந்தனைப் பொருத்தவரையில், அந்தத் தகுதியைப் பார்த்து நான் மகிழ்ந்திருக்கிறேன். மக்களோடு மக்களாக வாழுகின்ற, ஓர் இனத்தின் பிரதிநிதியாக செயற்படுகின்ற அந்தத் தன்மை எனக்கு மிகவும் பிடிக்கும்.

அரசியலில், இம்முறை அவருக்கு இந்த வாய்ப்புக் கொடுக்கப்பட்டமைக்குரிய நியாயம் என்னவென்றால், நான் ஓர் அறைக்குள்ளே இருந்துகொண்டு உலகத்தைப் பார்க்கின்றவன். அதனாலே சொல்கிறேன். இன்றைக்கு பரந்துவிரிந்துவிட்ட ஊடகத் தளங்களில், கேசவன் சயந்தனுடைய நேர்காணல்களைப் பார்க்கிறேன். தலைவர் எனச் சொல்கின்றவர்களுக்கு அந்தப் நேர்காணல்களுக்கு முகங்கொடுக்கத் தெரியவில்லை. நம்முடைய திருவள்ளுவர் திருக்குறளிலே, பொருட்பால் என்று அரசியல் பற்றி பேசுகின்ற இடத்திலே, மந்திரிக்கு முதல் அதிகாரமாக சொல்வண்மையை வைக்கிறார். வார்த்தை வண்மையைப் பயன்படுத்தத் தெரிந்தவனால்தான் அரசியலில் நிமிர்ந்து நிற்க முடியும் என்று திருவள்ளுவர் சொல்லுகின்றார். அந்தவகையில் நான் இந்த நேர்காணல்களைப் பார்க்கும்போதெல்லாம் கவலைப்படுவேன். தலைவர்கள் பலர், நேர்காணல் என்று வந்துவிட்டு, கேள்விகளுக்கு முகங்கொடுக்க முடியாமல், சிந்திக்கின்ற எண்ணத்திற்கு பதில் கொடுக்க முடியாது வார்த்தைகளிலே குழம்புவார்கள். இப்படியான நிலையில், அடுத்தடுத்து கேசவன் சயந்தனுடைய இரண்டு, மூன்று நேர்காணல்களைப் பார்க்க முடிந்தது. அதனைப் பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ந்தேன். இது தேர்தல் காலத்திலே நடந்த விடயமல்ல. இன்றைக்குப் சில காலத்திற்கு முன்னர் நான் பார்த்த அவரின் நேர்காணல் பற்றி குறிப்பிடுகின்றேன். சயந்தனுக்கே அதனைச் சொல்லிப் பாராட்டினேன். கேள்வியொன்றைக் கேட்டால் சரியான முறையிலே முகங்கொடுக்க அவருக்குத் தெரிகின்றது. தான் எடுத்துக்கொண்ட விடயத்தில் தெளிவாகவும், சுருக்கமாகவும் விபரிக்கின்ற அவரின் ஆற்றலைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். இன்றைக்கு இத்தகைய இளந்தலைவர்கள் நமக்குத் தேவை. பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி பேசுகின்ற தலைவர்களின் பேச்சுத்தான் ஓர் இனத்தினுடைய கருத்தாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆகவே ஓர் இனத்தினுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் பேசுகின்ற தகுதி பெற்றிருக்க வேண்டும். தான் நினைத்த கருத்தை சொல்லத் தெரிந்திருக்கவேண்டும். வெறுமனே வார்த்தைகளை சொல்லாமல், அது அவர்களுடைய உணர்வுசார்ந்த விசயமாகவும் இருக்க வேண்டும். சயந்தனைப் பொருத்தவரையில், மக்களோடு மக்களாக வாழ்ந்ததோ என்னவோ தெரியவில்லை, நம் இனப்பற்றிய உணர்வு அவரிடம் நிறைய இருக்கின்றது. அந்த உணர்வைத் தெளிவாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் அவரிடம் இருக்கின்றது. மக்களுடைய இன்பதுன்பங்களில் கலந்துகொள்கின்ற அந்த மனப்பாங்கு இருக்கின்றது. இவையெல்லாம் இருக்கிறவர்கள் இன்றைக்கு மிகக்குறைவானவர்களாகத்தான் இருக்கிறார்கள். விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன், இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவருக்கு தமிழரசுக் கட்சி கொடுத்திருக்கும் வாய்ப்பு மிகப்பொருத்தமானது என்றே கருதுகின்றேன். அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரின் ஆற்றல் மேலும் ஒளிர்விடும் என நான் நம்பிக்கை கொள்கின்றேன். ஆகவே நம் இனம்சார்பாக சொல்கிறேன், அனைத்து மக்களும் அவருக்கு ஆதரவளித்து அவரை வெற்றிபெறச்செய்யவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.





கேசவன் சயந்தன் கடந்த சில வருடங்களாக எனக்கு நன்கு அறிமுகமானவர். மிகவும் ஆர்வத்தோடு, பற்றுறுதியோடு செயலாற்றக் கூடியவர். தமிழரினுடைய நிலவுரிமைகள், வழிபாட்டு உரிமைகள், இந்துக் கோயில்களினுடைய உரிமைகள் முதலியவற்றுக்கு எதிராகத் திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகள் நாசிசப் பாங்கி லான நடவடிக்கைகளை மேற்கொண்டபொழுது, பல நூற்றுக் கணக்கான வழக்குகளிலே ஜனாதிபதி சட்டத்தரணி திரு.சுமந்திரனோடு கூடியி ணைந்து நீதிமன்றங்களில் வாதாடி வெற்றிபெற்று, அந்த உரிமைகளை மக்களுக்கு வென்று கொடுப்பதில் இவருடைய பங்கு கணிசமானதாகும். அது எல்லோரதும் பாராட்டுதலுக்குரியது. இதனை நீங்கள் மனதிற்கொண்டு, எதிர்காலத்திலும் இவ்வாறான பணிகளில் அவர் ஈடுபடுவதற்கு அவரைப் பயன்படுத்த வேண்டுமானால், அவருக்கு அமோகமான ஆதரவினை வழங்க வேண்டும். தமிழ் தேசிய அரசியலுக்கு தேவையான விடயங்களில் ஒன்று நேர்மை. இரண்டாவது தமிழ் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள பற்று. மூன்றாவது சேவை புரிகின்ற ஆர்வம். இந்த மூன்று பண்புளும் கேசவன் சயந்தனிடம் தாராளமாக இருக்கின்றன.

**- பேராசிரியர். சி.பத்மநாதன்**



நான் முன்னாள் போராளியாக இருந்தேன். எங்களைப் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அதில் ஆயிரக்கணக்காணவர்களை விடுதலை செய்து கொழும்பு நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். கொழும்பு நீதி மன்றத்தில், எல்லோருக்கும் புனர்வாழ்வளிக்கவேண்டும் எனத் தெரிவித்து, எங்களுக்கு கைவிலங்கிட்டு, புனர்வாழ்வு நிலையங்களுக்கு கொண்டு செல்ல தயாரானபோது, அந்நேரத்தில் கேசவன் சயந்தன் அவர்கள்தான் தனியொருவராக வருகைதந்து, எங்களுக்காக வாதாடினார். அவ்விடத்திலிருந்து 600இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் உடனடியாக விடுவிக்கப்படுவதற்காக கேசவன் சயந்தன் அவர்களே வாதாடினார். அவரின் சட்ட உதவியினால் அன்றையதினமே விடுதலைப் புலிகள் அமைப்பில் கலைசார்ந்த பணிகளில் ஈடுபட்டிருந்த 600இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டோம். இதற்காக நாம் என்றைக்கும் நன்றிக் கடன்பட்டவர்களாகவுள்ளோம். அன்றைய நாளில் போகுமிடம் தெரியாது தத்தளித்துக்கொண்டிருந்தோம். அந்நேரத்தில் எங்களுடன் வந்து கதைத்து, கை கொடுத்து உதவியர் கேசவன் சயந்தன் சட்டத்தரணி அவர்கள்தான். அதனை நாம் எப்போதும் மறக்கமாட்டோம். அன்றிலிருந்து இன்றுவரை என்ன உதவி வேண்டுமெனிலும், அவரைத்தான் நாடுகின்றோம். அவரும் முகஞ்சுழியாது எங்களுக்கான உதவிகளைப் புரிந்து வருகின்றார். ஆகவே இம்முறை இடம் பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் இலக்கம் மூன்றில் போட்டியிடும் கேசவன் சயந்தன் அவர் களுக்கே எமது ஆதரவினை வழங்குவோம்.

**-மாணிக்கம் சிறீஸ்கந்தராஜா, மந்துவில்**



திருக்கேதீச்சர ஆலய அலங்கார வளைவை உடைத்தமைக்கு எதிராக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கிலும், மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று நிறைவுற்ற வழக்கிலும், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சட்டத்தரணி கேசவன் சயந்தன் அவர்களும் முன்னிலையாகி வழக்காடி வருகின்றனர். இது சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஒரு செயலாகும். அதற்காக பாடுபட்டுவரும் இவர்கள் இருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**- திருமதி. அபிராமி கைலாசபிள்ளை**
**பிரதித் தலைவர்,**
**திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை**

காலைக்கதிர் Kalaikkathir

# வரலாற்று நாகரிக இரட்டையர்கள் இலங்கையும் இந்தியாவும் ஆகும்

## சந்தோஷ் ஜா பெருமிதம்



இலங்கையும் இந்தியாவும் வரலாற்று நாகரிகத்தின் இரட்டையர்களாகும். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பிணைப்புகள் இராஜதந்திர உறவுகளுக்கு அப்பாற்பட்டதுடன் ஆழமான கலாசார மற்றும் மூலோபாய இணைப்பிலும் கவனம் செலுத்துவதாக தெரிவித்த உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இரு நாடுகளும் பரஸ்பர மரியாதை மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பகிர்ந்துகொள்வதில்வேரூன்றியதனித்துவமான சகோதரத்துவத்தை கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தெற்காசிய சுற்றுலா தலைமைத்துவ மன்றத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

2023ஆம் ஆண்டில், இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டவர்களில் சுமார் 20 சதவீதமானோர் இந்தியாவை சார்ந்தவர்கள். இருநாடுகளுக்கும்இடையிலானவிரிவடைந்து வரும் இணைப்பின் எடுத்துக்காட்டாகவே இந்த எண்ணிக்கை உள்ளது.

வலுவான உட்கட்டமைப்பு, டிஜிற்றல் ஒருங்கிணைப்பு மற்றும் இலக்குக்கான ஊக்குவிப்புகள் ஆகியவை இந்தியப் பயணிகளுக்கான முதன்மையான இடமாக இலங்கையின் நிலையை உயர்த்துவதுடன், உள்ளூர் வேலை வாய்ப்பு மற்றும் அந்நியச் செலாவணி வருமானத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

இந்தியாவின் வலுவான சந்தை வாய்ப்புகளில் இலங்கைக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. 330,758 சுற்றுலாப் பயணிகளின் வருடாந்த வருகையால் இலங்கையின் மிகப் பெரிய மூலச் சந்தையாக இந்தியா உள்ளது.

இந்த வலுவான பங்களிப்பு சுமார் 200,000 நேரடி மற்றும் 300,000 மறைமுக வேலைவாய்ப்புக்கு பங்களிப்பு செய்கிறது. பொருளாதாரத்துக்கான அந்நியச் செலாவணி வருமானத்தின் மூன்றாவது பெரும் மூலாதாரமாகவும் உள்ளது.

இந்த எண்களை மேலும் விரிவுபடுத்துதல், உட்கட்டமைப்பு மற்றும் இணைப்பை மேம்படுத்துவதற்கான அரச மற்றும் தனியார் துறை முயற்சிகள் நம்பிக்கையளிப்பனவாக உள்ளது.

விடுமுறை நாள்களை இன்பமாக்க இலங்கைக்கு செல்லுமாறு இந்தியர்களை, வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஊக்குவித்து வருகின்றார்.

இலங்கையை ஒரு சற்றுலா இலக்காக மேம்படுத்துவதற்கான இந்திய முயற்சிகளின் வெளிப்பாடாகவேஇவைஉள்ளன.மறுபுறம்ஒரு வெளிநாட்டுதலைவர்தனதுசொந்தகுடிமக்களை அவர்களின் தாய்நாட்டுக்கு வெளியே விடுமுறைக்கு செல்ல ஊக்கப்படுத்துவது மிகவும் அசாதாரணமானதாகும்.

இருப்பினும் இந்தியாவின் அத்தகைய ஊக்குவிப்பு எமது இருதரப்பு உறவின் அரவணைப்பை எடுத்துக்காட்டுகிறது. பாரம்பரிய சுற்றுலாவுக்கு அப்பால் குறிப்பிட்ட வளர்ச்சிப் பகுதிகளும் உள்ளன. அதாவது பௌத்த மரபுரிமை கேந்திரங்கள் மற்றும் இராமாயண தொடர்புப் பாதை என்பன இந்திய பயணிகளுக்கு குறிப்பிடத்தக்க கலாசார இணைப்புகளுக்கு வழிவகுக்கின்றன.

இந்தியாவின் அயோத்தி கோயிலை உதாரணமாகக் கொண்டு, சாத்தியமான உள்ளூர் சுற்றுலா உட்கட்டமைப்பில் முதலீடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையே நேரடி விமானங்கள் உட்பட இந்திய மற்றும் இலங்கையை 250 விமான சேவைகள் இணைக்கின்ற நிலையில், இரு நாடுகளுக்கும் இணைப்பு என்பது முக்கிய முன்னுரிமையாக உள்ளது.

எவ்வாறாயினும், யாழ்ப்பாணத்தின் பலாலி விமான நிலையத்தை விரிவுபடுத்துதல், இந்தியா வழியாக பயணிக்கும் இந்தியர் அல்லாத சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவாயிலாகச் செயற்படுவது, அதன் மூலம் இலங்கையின் சுற்றுலாத்தளத்தை பன்முகப்படுத்துவது மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்தின் பயன்படுத்தப்படாத சுற்றுலாத் திறனை விரிவுப்படுத்தல் என்பன அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வழிவகுக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (05)

# லசந்த, தாஜுதீன் கொலைகளுக்கு நீதி வழங்கப்படும் என்கிறார் அநுர



சண்டேலீடர்ஆசிரியர்லசந்தவிக்கிரமதுங்க, ரக்பிவீரர் வாசிம் தாஜுதீன் படுகொலைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வேன் என ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க உறுதியளித்துள்ளார்.

லசந்தவிக்கிரமதுங்க, வாசிம் தாஜுதீன், பிரகீத் எக்னலிகொட விவகாரங்கள் குறித்து விசாரணை செய்துஅதற்குகாரணமானவர்களை அரசாங்கம் நீதியின் முன் நிறுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் தேர்தல் பேரணியில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ள அவர், அரசியல் அதிகாரம் படைத்தவர்களால் அப்பாவி மக்கள் கொல்லப்படும் யுகத்தை முடிவிற்கு கொண்டுவருவோம் எனத் தெரிவித்துள்ளார்.

அனைவரினதும் உயிர்களும் பெறுமதியானவை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# பதுளை – மஹியங்கனை வீதியில் பஸ் வீட்டு மதிலில் மோதி விபத்து

பதுளை - மஹியங்கனை பிரதான வீதியில் பயணித்த தனியார் பஸ்ஸொன்று பதலபிட்டி பிரதேசத்தில் பலகொல்ல வீதியை விட்டு விலகி, அருகில் உள்ள வீடொன்றின் மதிலில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பஸ்ஸின் சாரதிக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்றபோது வீட்டில் ஒரு சிறு குழந்தை மற்றும் ஒரு தம்பதி இருந்ததாகவும், அவர்கள் ஒரே அறையில் இருந்ததால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# நுவரெலியா – கண்டி வீதியில் குடைசாய்ந்த கனரக வாகனம்



நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் லபுக்கலை குடாஓயா பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் கனரக வாகனமொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதனால் சுமார் ஒரு மணிநேரம் அவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

அவ்வீதியில் பாரிய வளைவுப் பகுதியில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டு, அதனால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததாலேயே இவ்விபத்து நேர்ந்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் புற்களை கொழும்பு துறைமுகத்திலிருந்து நுவரெலியா வழியாக அம்பேவல நியூசிலாந்து பாற்பண்ணைக்கு ஏற்றிச் சென்ற கனரக வாகனமே விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்பட வில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியில் வாகனம் குடைசாய்ந்ததால் அவ்வீதியின் ஊடாக பயணித்த ஏனைய வாகனங்கள் வீதியின் இரு புறங்களிலும் பயணத்தை தொடர முடியாதவாறு நீண்ட வரிசையில் நிறுத்தப்பட்டதன் காரணமாக சுமார் ஒரு மணிநேரம் அவ்வீதி யூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதன்போது, நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் அவ்வீதியில் போக்குவரத்தை சீர்செய்யும் பணியில் ஈடுபட்டனர். (05)



# பனாமுரயில் மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் இறப்பு

பனாமுர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, முலடியாவல மலபலவ வீதியில், மோட்டார் சைக்கிள் ஒன்று உழவு இயந்திரத்துடன் மோதியதில் , மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிபிட்டிய முலடியாவல பிரதேசத்தில் வசிக்கும் 19 வயதுடைய இளைஞரே இவ் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

முலடியாவலயிலிருந்து மலபலாவ நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மலபலாவயிலிருந்து முலடியாவல நோக்கி பயணித்த உழவுஇயந்திரத்துடன்மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்பலத்தகாயங்களுக்குஉள்ளாகி எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம்எம்பிலிபிட்டியவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் உழவு இயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பனாமுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நீரில் மூழ்கியதில் ஒருவர் குளியாப்பிட்டியில் சாவு

குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வஹுமுவ பிரதேசத்திலுள்ள வெல்யாயே கால்வாயில் வீழ்ந்து நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்குபுக்கொடுவ, அனுக்கனே பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவர் ஆவார்.

உயிரிழந்தவர் குளியாப்பிட்டியில் உள்ள பாடசாலை ஒன்றில் பாதுகாவலராகப் பணிபுரிந்து வந்துள்ளார். இவர்கடந்த 8 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது, இந்தக் கால்வாயில்தவறிவிழுந்து, உயிரிழந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் குளியாப்பிட்டிய வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை குளியாப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)


பாராளுமன்றத்தில்
நீதிமன்றத்தில்
மக்கள் மன்றத்தில்
தமிழருக்காய் ஒலிக்கும் குரல்
அடையாளம் மாறாத அரசியல் மாற்றம்
சுமந்திரன்
X
1

### எதிர்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள முன்னாள் ஜனாதிபதியை ஆதரித்த கட்சியினருக்கும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரின் கட்சியினருக்கும் ஒரு சவால் விடுகின்றேன்.

முடிந்தால் நாம் ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளில் அரைவாசியை நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக்காண்பியுங்கள் என்பதே அந்த சாவாலாகும் என்றார்.

### நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் தலைமையில் இந்த குழு இலங்கை வரவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

### இன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சுயேச்சை குழுக்களுக்கு ஒரு தொகுதியில் ஒரு தேர்தல் அலுவலகத்தை மாத்திரமே வைத்திருக்க முடியும்.

அத்துடன் வேட்பாளரின் வீட்டை அலுவலகமாக பராமரிக்கலாம். ஆனால், அந்த அலுவலகங்களில் எதுவும் அலங்கரிக்கவோ அல்லது வேறு எந்த பரப்புரைப் பணிகளைச் செய்யவோ முடியாது என்றார்.

### டக்ளஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தல் கூட்டத்தில் வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார். ஊழல் மிக்க மகிந்த மற்றும் ரணிலின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த டக்ளஸுக்கு தமது ஆட்சியில் ஒருபோதும் அமைச்சுப் பதவி வழங்கப்படாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

பிமல் ரத்நாயக்கவின் கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவித்து டக்ளஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பதவியேற்றதன் பின்னர், அவருக்கு வாழ்த்தினைக் கூறுவதற்காகவும், இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய இழுவைமடிவலைப் படகுகளின் செயற்பாடுகள் தொடர்பிலான இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையிலான பேச்சு தொடர்பாகவும், டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக செயற்பட்டிருந்த காலகட்டத்தில் முன்னெடுத்திருந்த வேலைத்திட்டங்களைத் தொடர்வது மற்றும் தயார் நிலையில் இருந்த வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது ஆகியன உள்ளடங்கிய 37 விடயங்கள் தொடர்பாகவும் தொலைபேசி மூலம் உரையாட டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியைத் தொடர்பு கொண்டிருந்தார்.

நேரில் சந்தித்து மேற்படி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இருவரும் இணங்கிய நிலையில், ஜனாதிபதி நேரம் ஒதுக்கித் தந்திருந்ததன் பிரகாரம், ஒக்டோபர் 25 மாலை 3.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருவருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

மேற்குறிப்பிட்ட விடயத்தையே டக்ளஸ் தேவானந்தா பொதுவாகக் கூறினாரே தவிர, அமைச்சுப் பதவி குறித்து கலந்துரையாடப்பட்டதாகவோ, தனக்கு அமைச்சுப் பதவி தருவதற்கு ஜனாதிபதி இணங்கினார் எனவோ, இணங்கவில்லையென்றோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லை.

டக்ளஸ் தேவானந்தாவின் சந்திப்புகள், கலந்துரையாடல்கள், வேலைத்திட்டங்கள் தொடர்பான அனைத்துச் செய்திகளும் பகிரங்கமாகவே அவரது உத்தியோகபூர்வ முகநூல் பக்கங்களிலும், ஈ.பி.டி.பி. கட்சியின் இணையத்தளத்திலும் வெளியாகி வருகின்றன. அவற்றில், அமைச்சுப் பதவி தொடர்பிலான எந்தக் கருத்துக்களையும் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டார் என்று செய்திகள் இடம்பெறவில்லை.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் பல ஊடகசந்திப்புக்களில் அவர் கலந்துகொண்டார், அப்போதும்கூட அமைச்சுப்பதவி தொடர்பான கருத்துக்கள் எதனையும் அவர் கூறவில்லை.

தவிர, இத்தகைய பொய்யான ஒரு தகவலை முன்வைத்து அரசியல் இலாபம் தேட வேண்டிய அவசியம் எதுவும் எமது கட்சிக்கு இல்லை.

இத்தகைய நிலையில், பிமல் ரத்நாயக்க வேண்டுமென்றோ அல்லது தவறான புரிந்துணர்வுடனோ இத்தகையதொரு கருத்தினை முன்வைத்திருப்பது ஆரோக்கியமான அரசியல் அல்ல என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அறுகம்பே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தினார்.

அப்பகுதிக்கு நேரில் சென்ற அவர் அங்குள்ள பாதுகாப்பு நிலவரம் குறித்துக் கேட்டறிந்தார். பாதுகாப்பு அதிகாரிகளுடன் நிலமை குறித்துக் கலந்துரையாடினார். அறுகம்பே வரும் சுற்றுலாவிகளின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் அவருக்கு விளக்கினர்.

இந்தப் பகுதியின் பாதுகாப்பை மேலும் தீவிரமாக்குவதற்கும், தீவின் ஏனைய பகுதிகளில் உள்ள சுற்றுலாத் தலங்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புச் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அதிகாரிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் சுற்றுலாப் பயணிகளின் சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் எடுக்கப்படவேண்டும் என்றும், இலங்கையின் பாதுகாப்பு குறித்து அவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் இராணுவம், விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் குழுவும் கலந்துகொண்டனர்.

அண்மையில் அறுகம்பே பிரதேசத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடைபெறக்கூடிய சாத்தியம் இருப்பதாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அறிவித்தன. அதன் பின்னர், சம்பவம் தொடர்பாக இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதல் அச்சம் காரணமாகத் தமது நாட்டு மக்களை அறுகம்பேகுடாவிற்குச் செல்வதைத் தவிர்க்குமாறும், அங்கிருப்பவர்களை வெளியேறுமாறும் இஸ்ரேல் அறிவித்தது. தமது நாட்டு மக்களை எச்சரிக்கையோடு இருக்குமாறு அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் எச்சரித்தன. பின்னர் அந்த எச்சரிக்கைகள் விலக்கிக்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீது துப்பாக்குச் சூடு நடத்திய வர்தான் என்று அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

### மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 65,000 மில்லியன் ரூபாய பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், விற்பனை செய்யப்படவுள்ளன.

அத்துடன் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக்கொண்ட 20,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

### விஜேவீர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அனுரகுமார அவர்களே, உங்கள் அன்புக்குரிய தோழர் ரோஹண விஜேவீர உயிருடன் சுடுகாட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டது தொடர்பில் நீங்கள் ஜனாதிபதியாக பதவியேற்ற நாள் முதல் தேடுவீர்கள் என உங்களுக்காக எமது மக்கள் காத்திருக்கின்றனர்.

எங்கள் பல்கலைக்கழகத்தில் எங்களுடன் இருந்தவர்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் கிராமத்தை சேர்ந்த அப்பாவி மக்கள்.

தாஜுதீன், லசந்த மற்றும் எக்னலிகொட பற்றிய வலி எமது கார்த்திகை மாவீரர்கள் தொடர்பிலும் இருக்க வேண்டும். அதைப் பற்றி அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். துணிச்சலான எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்துக்கு நாம் வருவோம்.

இந்த நாட்டில் கொல்லப்பட்ட அனைத்து அப்பாவி மக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒரு ஆணைக்குழுவை அமைக்கும் யோசனையை நாங்கள் கொண்டு வருவோம்.. அதற்காக நாங்கள் சகோதரர் அநுர குமாரவுடன் நிற்போம் என்றார்

# 2.5 லட்சம் விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கவில்லை

## கணக்காய்வு அறிக்கையில் தகவல்

விவசாய ஓய்வூதியம் பெற வேண்டிய 60 வயது நிரம்பிய 2 இலட்சத்து 64 ஆயிரத்து 227 விவசாயிகளுக்கு விவசாய ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அறிக்கையின்படி, விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் 8 இலட்சத்து 71 ஆயிரத்து 425 விவசாயிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 31, 2023ஆம் ஆண்டின் நிலவரப்படி, 61 முதல் 93 வயதுடைய விவசாயிகளின் எண்ணிக்கை 4 இலட்சத்து 74 ஆயிரத்து 803 ஆகும்.

இருப்பினும் 2 இலட்சத்து 64 ஆயிரத்து 227 விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்பதும் அந்த அறிக்கையில் தெரியவந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில், 60 வயது நிறைவடைந்தும் ஓய்வூதியம் பெறுவதற்காக விண்ணப்பங்களை அனுப்பாத ஓய்வூதியதாரர்களை கண்டறிய அனைத்து மாவட்ட மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் உதவிப் பணிப்பாளர்களுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் 12 மாவட்ட அலுவலகங்களின் அறிக்கையை சரிபார்த்தபோது, அதில் 06 மாவட்ட அலுவலகங்கள் எழுத்துமூல அறிவிப்பின்படி செயல்படவில்லை.

60 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதியத்தை பெறவேண்டிய விவசாயிகளை அடையாளம் காண தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கணக்காய்வு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளது.

# 11 மாதங்களின் பின்னர் மீண்டும் தலைமன்னாருக்குத் தொடருந்து

## நாளை மாலை புறப்பாடு

தலைமன்னாருக்கான ரயில் சேவை 11 மாதங்களின் பின்னர் நாளை முதல் மீளத் தொடங்கப்படவுள்ளதாகத் தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து தலைமன்னார் வரையிலான முதலாவது தொடருந்து, நாளைமாலை 4:15 இற்குப்புறப்படும் என ரயில்வே திணைக்களத்தின் பிரதிப்பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

நேர அட்டவணையின்படி, குறித்த தொடருந்து இரவு 9.50 அளவில் தலைமன்னாரை சென்றடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல் கால பேரிடர்களை எதிர்கொள்ளத் திட்டம் தயார்

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பில் விசேட வேலைத்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்காக மத்திய நிலையத்தில் விசேட பிரிவு ஒன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அதன் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் 12 முதல் இந்த பிரிவின் பணிகள் ஆரம்பமாகவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும், தேர்தலுக்குப் பின்னரும் 05 நாட்களுக்கு தேர்தல்கள் செயலகத்துடன் இணைந்து இந்த விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பிரதீப் கொடிப்பிலி மேலும் கூறியுள்ளார்.



# சுன்னாகத்தில் பொலிஸாரின் அராஜக செயற்பாடு குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும்

## மாற்றம் வெறும் சொல்லிலேயே என அரசு மீது பிரகாஷ் காட்டம்

சுன்னாகத்தில் ஒரு சாதாரண விபத்தில் தவறிழைத்தவர்களை விட்டுவிட்டு காட்டுமிராண்டித் தனமாக வானில் வந்த அப்பாவி மக்கள் மீது கோரத்தனமாகத் தாக்கிய பொலிஸாரும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் உடன் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவதுடன், அவர்களை உடன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தண்ணியில்லா காட்டுக்கு இடமாற்றவேண்டும்.

- இவ்வாறு மிகவும் காட்டத்துடன் தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.கிளிநொச்சி மாவட்ட வேட்பாளரும் வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான தி.பிரகாஷ்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு -

மாற்றம், ஊழல்ஒழிப்புஎன்றுஆட்சியைப் பிடித்த அநுர அரசு, தென்னிலங்கை பெரும்பான்மைமக்கள்மத்தியில்அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மட்டுமே அங்கு மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு, வடக்கு - கிழக்குக்கு குற்றமிழைத்தவர்களை இடமாற்றம் செய்கின்ற பிரதேசமாக - சூனிய பிரதேசமாக-கருதுகின்றதோஎன்றுஎண்ணத் தோன்றுகின்றது. பனைஅபிவிருத்திச்சபைக்கு ஊழல் பேர்வழியானவரைத் தலைவராக நியமித்தமையும் இதனையே காட்டுகின்றது. இங்கு அநுர அரசுக்கு குடைபிடித்து அவரது தேசிய மக்கள் சக்தியில் வேட்பாளர்களாக உள்ளவர்களும்எமதுமக்களின்பிரச்சினைகள் தொடர்பில்கண்டுகொள்வதாக - கண்டிப்பதாக - இவ்வாறான சம்பவங்களை சம்பந்தப்பட்ட அமைச்சு மட்டத்துக்கு எடுத்துச் செல்வதாகத் தெரியவில்லை.

தெற்கில் குற்றமிழைத்து, அங்குள்ள சிங்கள மக்களுக்கு பாதிப்பு வரக்கூடாது என்பதற்காக வடக்குக்கு இந்தப் பொலிஸார் அனுப்பப்பட்டனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஒருவர் தவறிழைக்கலாம். அது மன அழுத்தத்தால் ஏற்பட்டதென்று கூறலாம். அதில் தவறில்லை. ஆனால், ஒரு பொலிஸ் நிலையத்தில் உள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து அதனை தடுக்காமல் செயற்பட்ட விதத்தை நோக்கும்போது இவ்வாறேஎண்ணத் தோன்றுகின்றது.



அந்த இடத்திலே காட்டுமிராண்டித் தனமாக 2 மாதக் குழந்தையைத் தூக்கி, பற்றைக்குள் பொலிஸார் எறிந்தனர் என்று தாயார் குறிப்பிடுவதில் இருந்து, அவர்கள் சிறிதளவும் மனிதநேயமற்று செயற்பட்டுள்ளார்கள் என்பதைத் துலாம்பரமாகக் காட்டுகின்றது.

ஆகவே, இந்த விடயத்தை மனித உரிமைகள் திணைக்களம் சம்பந்தப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, நீதி பெற்றுக்கொடுப்பதுடன், சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும், பதவிநிலையைக் குறைத்து, தண்ணியில்லாக் காட்டுக்கு உடன் இடமாற்றம் செய்யவேண்டும் என பதில் பொலிஸ்மா அதிபரையும் பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சையும்கேட்டுக்கொள்கிறேன். - என்றுள்ளது. (05)


# தமிழ்நாட்டின் மண்டபம் அகதி முகாமிலிருந்து நெடுந்தீவை வந்தடைந்த 9 இலங்கையர்கள்

இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியிருந்த ஒன்பது இலங்கையர்கள் நெடுந்தீவை வந்தடைந்தனர்.

திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சிறுவர்கள் உட்பட ஒன்பது பேரே நெடுந்தீவுக்கு நாட்டுப்படகில் வந்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் தகவல் அறிந்த நெடுந்தீவு பொலிஸார், அந்த 9 பேரையும் தனியார் ஒருவரின் வீட்டில் தங்கவைத்துள்ளனர்.

பின்னர், இவர்களுக்கு நெடுந்தீவு வைத்தியசாலையில் முதலுதவி மற்றும் உடல் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. (05)




# மண்வெட்டியால் தாக்கப்பட்டுப் பெண் படுகொலை சந்தேகநபர் தப்பியோட்டம்: வவுனியாவில் சம்பவம்

பெண்ணொருவர் மண்வெட்டியால் தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் சனிக்கிழமைமாலைவவுனியாஈச்சங்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளது.

வவுனியாஈச்சங்குளத்தில்அம்மிவைத்தான் பகுதியில் வசித்த 58 வயது பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இக்கொலையுடன் தொடர்புடைய நபர், அப்பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும், சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# வென்னப்புவ துப்பாக்கிச் சூடு தொடர்பில் இருவர் கைது

வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிம்புல்காலபிரதேசத்தில்வீடொன்றுக்குஅருகில், துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 07ஆம் திகதி மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரும், வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவருமே இத்துப்பாக்குச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட வர்களிடமிருந்துதுப்பாக்கிச்சூட்டுக்குபயன்படுத் தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 12 போர் ரக துப்பாக்கி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 25 மற்றும் 37 வயதுடைய வென்னப்புவ, லுனுவில ஆகியபிரதேசங்களைச்சேர்ந்தவர்கள்ஆவர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் வென்னப்புவபொலிஸார்ஈடுபட்டுவருகின்றனர். (05)

# லொறி - மோ. சைக்கிள் ஓட்டமாவடியில் விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

ஓட்டமாவடியில் லொறியொன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் ஒருவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி அக்கர் பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த நபரே உயிரிழந்தவர் ஆவார்.

இவர் தான் பணிபுரியும் ரிதிதென்ன எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த சிறிய ரக லொறி மோதி சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.



சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளில் வாழைச்சேனை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)


பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
தமிழர் இருப்பு
பொருளாதார அபிவிருத்தி
கௌரி காப்பு
1. ஐம்பதுவீத பெண்கள் பங்களிப்பு
2. வெளிப்படைத்தன்மை
3. மனநல பாதுகாப்பு
4. காணியுரிமை
5. விவசாய மறுமலர்ச்சி
6. போதைவஸ்து ஒழிப்பு
7. கல்வி மேம்பாடு
8. இளம் தொழின் முயற்சியாளருக்கான உதவித்தொகை வழங்குதல்
9. மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்
10. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சிறுகைத்தொழில் ஊக்குவிப்பு
11. திரைப்படத்துறை மீள் உருவாக்கம்
12. பதனிடப்பட்ட உணவு வகைகள் உற்பத்தி ஏற்றுமதியை அதிகரித்தல்
13. சூழல் பாதுகாப்பு மீள் சுழற்சி திட்டம்
14. பெண்கள், சிறுவர், முதியோர் பாதுகாப்பு திட்டங்கள்
15. தகவல் தொழிநுட்ப பூங்கா உருவாக்கம்
16. சுற்றுலாத்துறை அபிவிருத்தி
17. சமூகவலைத்தள பாதுகாப்பு
18. கூட்டுறவுச்சங்கங்களின் வகிபாகத்தை பலப்படுத்தல்
19. மீனவர்களின் நிரந்தர வாழ்வாதார உரிமத்தைப் பாதுகாத்தல்
20. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SGDs) அடைதலுக்கான உறுதிப்பாடு
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9

# யாழ்.சுன்னாகத்தில் விபத்தின் பின்னர் பொலிஸார் அராஜகம்

## 2 மாதக் குழந்தையை தூக்கி பற்றைக்குள்வீசி தாய், தந்தையை கடுமையாகத் தாக்கினராம்!

## நீதி கோரும் தாய், தந்தையர்

யாழ். சுன்னாகத்தில் வாகனமொன்றின் மீது இருவர் மதுபோதையில் வந்து மோதிய சம்பவத்தை தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார் இரண்டு மாத குழந்தையின் தாய், தந்தை மற்றும் உறவினர்கள் சிலரின் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை மேற்கொண்டனர் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மாத குழந்தையை பற்றைக்குள் தூக்கியெறிந்த பொலிஸார் தாயையும் தந்தையும் கடுமையாக தாக்கினார்கள் என தாயார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது –

நாங்கள் வீதியால் சென்று கொண்டிருக்கும்போது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் எங்கள் வாகனத்தை முந்தி செல்ல முயன்று தாங்களே அடிபட்டு கீழே விழுந்தார்கள்.

நானும் எனது கணவரும் அக்காவும் எங்களது வாகனத்தில் வந்துகொண்டிருந்த போது இந்த சம்பவம் இடம்பெற்றதால் நாங்கள் நின்றுவிட்டோம்.

கீழேவிழுந்தவர்மதுஅருந்தியிருந்தார். கீழேவிழுந்தவர்மதுஅருந்தியுள்ளதாகவும் நீங்கள் பயப்பட வேண்டாமென அங்கிருந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு சிவில் உடையில் வந்தவர்கள் எனது கணவரிடம் வாகனச்சாரதி அனுமதிப்பத்திரத்தை கேட்டார்கள். ஆனால் அவர் போக்குவரத்து பிரிவினர் வந்தால் தான் கொடுக்க வேண்டும் என்பதால் கொடுக்கவில்லை.

எனது கணவரின் கையைப் பிடித்து இழுத்தார்கள் நான் விடவில்லை. எனக்கு கறுப்புநிற ரிசேர்ட் அணிந்த பொலிஸ்காரர் அடித்தார்.

இரண்டுமாத குழந்தையுடன் இருந்த எனக்கு அடித்தார்கள். நான் மயிலிட்டியில் இருக்கும் அண்ணாவுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டேன். அண்ணா சம்பவ இடத்திற்கு வந்தார்.

அவர் என்னவிடயம் என கேட்க அவருக்கும் அடித்துவிட்டு அக்காவுக்கும் அடித்தார்கள் எனது இரண்டுமாத குழந்தை வீதியில் விழுந்த நிலையில், எனது பிள்ளையை தூக்கி பற்றைக்குள் எறிந்தார்கள். இதனை நான் தட்டிக்கேட்க என்னை அடித்துவிட்டு வெள்ளை ரிசேர்ட் அணிந்தவர் எனது போனை தூக்கி எறிந்தார் பொதுமக்கள் தான் எனது தொலைபேசியை எடுத்துத் தந்தார்கள்.

எனது கணவர் பிள்ளையை வானிற்குள் கொண்டு போக எனது பிள்ளையை கீழே போட்டுவிட்டு எனது கணவரிற்கு கையால் அடித்தார்கள். பிள்ளையை மருத்துவமனைக்கு கொண்டுபோக நாம் முயன்றபோது நீலநிற ரிசேர்ட் அணிந்தவர் வாகனத்தை இரும்பு கம்பியுடன் மறித்துக்கொண்டு நின்றார். வாகனத்தை எடுத்தால் உடைத்துவிடுவோம். – என்றார்.

அண்ணா பிள்ளையை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல எங்கள் இரண்டு பேரையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று அடித்ததுடன் கதிரையாலும் தாக்கினார்கள். எனக்கு புற்றுநோய் உள்ளது. எனது பிள்ளை பிறந்து இரண்டு மாதம். எங்களிற்கு நியாயம் பெற்றுதாருங்கள். எங்கள் வாகனத்தை மீட்டு தாருங்கள். – என்றார். (05)






காலைக்கதிர் Kalaikkathir

# கைக்குழந்தையுடன் காணப்பட்ட பெண் மீது பொலீஸார் தாக்குதல்

## கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



யாழ். சுன்னாகத்தில் இடம்பெற்ற விபத்து சம்பவத்தின் பின்னர் பொலிஸார் அந்த வானிலிருந்த ஆண்களிற்கு மிக மோசமாக அடித்து கைக்குழந்தையுடன் காணப்பட்ட பெண் உட்பட வானிலிருந்த பெண்களை ஓட்டோவில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்று அங்கு மிலேச்சத்தனமாக தாக்கியுள்ளனர் என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டதும் உடனடியாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், நடராஜா காண்டீபன் ஆகியோர் பொலிஸாருடன் கதைத்து தாக்குதலுக்கு உட்பட்டவர்களை உடனடியாக பார்வையிட்டு அவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்கள்.

இதன் பின்னர் கஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்துள்ளதாவது -

பொலிஸார் அந்த வானிலிருந்த ஆண்களிற்கு மிக மோசமாக அடித்து கைக்குழந்தையுடன் காணப்பட்ட பெண் உட்பட வானினிலிருந்த பெண்களை ஓட்டோவில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவந்து மிலேச்சத்தனமான விதத்தில் தாக்கியுள்ளதுடன் கடும் காயங்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்றவேளை, தான் அந்த இடத்தில் இருக்கவில்லை என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எங்களுக்கு தெரிவித்துள்ளார். ஆனால் பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து மிலேச்சதனமாக தாக்கியுள்ளனர் என அவர் எங்களிடம் ஒப்புக்கொண்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்திற்கு வெளியே நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என அவர் எம்மிடம் தெரிவித்தார்.

ஆனால் அடிபட்ட பிரதேசத்தில் உள்ள நிலைமைகளை பார்க்கின்ற போது சி.சி.ரி.வி. ஊடாக நடந்த முழு சம்பவத்தையும் அறிவதற்கான வாய்ப்புள்ளது என அங்குள்ள மக்களின் கருத்துக்களின் மூலம் நாங்கள் அறிய முடிகின்றது.

இந்த சம்பவம் எமக்கு மீண்டும் மீண்டும் தெரிவிக்கின்ற விடயம் என்னவென்றால் வடக்கு, கிழக்கிற்கு உள்ளே பொலிஸார் என்ற பெயரில் அனுப்பப்படுகின்றவர்கள் காடையர்களாக செயற்படுவதை நாங்கள் காணக்கூடியதாக உள்ளது.

உண்மையிலேயே இது பொதுப்பிரச்சினை. தெற்கிலே விதிமுறைகளை மீறி செயற்படுகின்ற பொலிஸார் தண்டனைக்காக வடக்கு பகுதிக்கு இடமாற்றப்படுகின்றநிலைமைதான்காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கிலே உள்ள மக்களை அரசாங்கம் ஓர் எதிரிபோன்று பார்க்கின்ற நிலையில் அவர்கள் எப்படி பிழையாக நடந்துகொண்டாலும் அதனை மூடிமறைக்கின்ற வகையில் மக்களை பாதுகாக்கின்ற வகையிலேசெயற்படாமல்பொலிஸாரைபாதுகாக்கின்ற வகையிலேயே செயற்படுகின்றது.

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இந்த நிலைமை தொடர்கின்றது என்பதை இந்த சம்பவம் தெளிவாக காண்பிக்கின்றது. - என்றார்.

(05)

# சுன்னாகத்தில் பொலிஸாரினால் கோரமாக தாக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டுமாம்!

## கீதநாத் காசிலிங்கம் கோருகிறார்



யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றுள்ள சம்பவம் தொடர்பில் நீதி வழங்கப்படவேண்டும் என பொதுஜனபெரமுனவின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் கீதநாத்காசிலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் சுன்னாகம் பொலிஸாரால் இளந்தாயொருவரும், அவரது பச்சிளம் குழந்தையும்கணவனும்சனிக்கிழமைஇரவு தாக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் சம்பவம் தொடர்பில் நான் கவலையடைவதுடன், இந்த சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு தாக்குதல் நடத்தியோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நீதி கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டி நிற்கின்றேன்.

இந்த சம்பவம் தொடர்பில் பலரும் ஆளும் அரசாங்கத்தை கண்டிப்பதை காண முடிகின்றது. ஒரு சில அதிகாரிகள் விடும் தவறுகளுக்கு அரசாங்கத்தை குறை கூறி பயனில்லை. இப்படியான சம்பவம் எமது பொதுஜன பெரமுன அரசாங்க காலத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. அதன்போது பிழை விடும் அதிகாரிகள்மீதுசுமத்தவேண்டியகுற்றச்சாட்டுக்களை அரசாங்கத்தின் மீது சுமத்தினார்கள்.

சனிக்கிழமை தாக்குதல் சம்பவத்தில் குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக்கருத்தில்லை. இது தொடர்பில் உரிய விசாரணை நடத்தி நீதியை நிலை நாட்ட வேண்டும் என்பது எங்கள் கோரிக்கையாக இருக்கின்றது. - என்றுள்ளது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.11.2024இல் வெளியிடப்பெற்றது